DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 284/2024** |
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : அனிதா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 24.07.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 24th **July 2025.**

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் பியூட்டி பார்லர் வைத்து வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 22.07.2018ம் தேதி இரவு 10 மணிக்கு எனது வீட்டிற்கு முன்னால் எனக்கு சொந்தமான TN 79 C 4242 என்ற பதிவெண் கொண்ட Jupiter இருசக்கர வாகனத்தை நிறுத்தியிருந்தேன். மறுநாள் 23.07.2018ம் தேதி காலை 6 மணிக்கு வீட்டிற்கு வெளியில் வந்து பார்த்தபோது எனது வண்டியை காணவில்லை. காணாமல் போன எனது வண்டியின் மதிப்பு சுமார் ரூ.40000 இருக்கும். அக்கம் பக்கம் தேடிப்பார்த்தோம். எனது இருசக்கரவாகனத்தை கண்டுபிடிக்கமுடியவில்லை. அதன்பின்னர் காவல்நிலையம் சென்று புகார்மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும்புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது**. வழக்கு பதிவு செய்யப்பட்டு சுமார் 1–1/2 மாதம் கழித்து போலீசார் என்னை காவல்நிலையத்திற்கு வரச்சொன்னார்கள். போலீசாரிடம் நான் காணாமல் போன எனது வண்டியை அடையாளம் காட்டினேன். எதிரியையும் காவல்நிலையத்தில் வைத்து அடையாளம் பார்த்தேன். நீதிமன்றம் மூலமாக மனு செய்து எனது இருசக்கரவாகனத்தை பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படம்–4 எண்ணம் காணாமல்போன வண்டிக்கான புகைப்படம்தான். **TN 79 C 4242 என்ற பதிவெண் கொண்ட Jupiter இருசக்கர வாகனத்தின் புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **TN 79 C 4242 என்ற பதிவெண் கொண்ட Jupiter இருசக்கரவாகனம் சா.பொ. 1 ஆகும்**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

புகார் மனு யாரால் எழுதப்பட்டது என்றால் போலீசார் எழுதிக்கொடுத்தனர். வண்டி காணாமல் போன மறுநாளே நான் புகார் மனு அளித்து வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது வண்டி காணாமல் போனதிலிருந்து 1–1/2 மாதத்தில் எனது வண்டியை கண்டுபிடித்துவிட்டார்கள் என்றால் சரிதான். 1–1/2 மாதம் கழித்து நான் காவல்நிலையம் சென்றபோது எதிரியுடன் சேர்த்து சுமார் 10 நபர்கள் காவல்நிலையத்தில் இருந்தனர் என்றால் சரிதான். சம்பவம் நடப்பதற்கு முன்பு ஆஜர் எதிரி மற்றும் அவரது அம்மாவை எனக்கு தெரியுமா என்றால் அவர்களுடன் எனக்கு பழக்கம் இல்லை. ஆனால் அவர்கள் நான் குடியிருந்த தெருவில் குடியிருந்த விபரம் எனக்கு தெரியும். நான் காவல்நிலையம் சென்று எதிரியை பார்த்தபோது அவர் எதற்காக அங்கு இருந்தார் என்று தெரியுமா என்றால் முதலில் எனக்கு தெரியாது. போலீசார் கூறியபிறகு எனது வண்டி எதிரியால் திருடப்பட்டது என்று தெரிந்து கொண்டேன். நான் கூறிய நாள் நேரத்தில் புகார் மனு அளிக்கவில்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 284/2024** |
| Deposition of Witness for | : PW 2 |
| Name | : முருகையா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 24.07.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 24th July 2025.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் கார் டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 அனிதா எனது மனைவி. 22.07.2018 ம் தேதி இரவு சுமார் 10 மணிக்கு எங்களது வீட்டிற்கு முன்னால் எங்களுக்கு சொந்தமான Jupiter இருசக்கரவாகனத்தை நிறுத்தியிருந்தோம். மறுநாள் காலையில் சுமார் 7 மணியளவில் பார்க்கும்போது இருசக்கரவாகனத்தை காணவில்லை. அக்கம் பக்கம் தேடிப்பார்த்தோம் கிடைக்கவில்லை. அதன்பின்னர் காவல்நிலையம் சென்று எனது மனைவி புகார் கொடுத்தார். அதன்பின்னர் 2 மாதம் கழித்து போலீசார் காவல்நிலையத்திற்கு வரச்சொன்னார்கள். காவல்நிலையத்தில் காணாமல் போன எங்களது இருசக்கரவாகனத்தை அடையாளம் காட்டினோம். ஆஜர் எதிரியை தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

22.07.2018 ம் தேதி எங்களது இருசக்கரவாகனம் காணாமல் போனபிறகு மறுநாளே எனது மனைவி புகார் அளித்து அதன்பேரில் வழககு பதிவு செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. நான் முதல்விசாரணையில் கூறியவாறு 2 மாதம் கழித்து காவல்நிலையம் சென்றபோது ஆஜர் எதிரி காவல்நிலையத்தில் இல்லை என்றால் சரிதான். நான் கூறிய நாள் நேரத்தில் எங்களது இருசக்கரவாகனம் காணாமல் போகவில்லை என்றாலும், எனதுமனைவி அது குறித்து புகார் மனு அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல.